# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 30–10–2017 ம் தேதி திங்கள் கிழமை நடைபெற்ற சாதாரணரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள்கள் மற்றும் தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள கடைகளுக்கு மின்கட்டணம் செலுத்தப்பட உள்ளது. தற்போது மின்கட்டணம் மின்சார வாரியத்திடமிருந்து கீழ்கண்ட கடைகளுக்கு மின் கட்டணம் செலுத்த கேட்டு கேட்பு வரப்பெற்றுள்ளது. ஆகவே கீழ்கண்ட தொகையினை மின்சார வாரியத்திற்கு செலுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| பிரிவு | A3 | - | Rs. 381 |
| | A5 | - | Rs. 392 |
| | A6 | - | Rs. 392 |
| | A7 | - | Rs. 392 |
| | A8 | - | Rs. 392 |
| | A9 | - | Rs. 388 |
| | Total | | Rs.2337 |

**நகர்மன்றத் தீர்மான எண்.2969,**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், ஓட்டுநர்கள், மின்கம்பியாளர்கள், மின்கம்பி உதவியாளர், மகப்பேறு மாது மற்றும் அலுவலக உதவியாளர் 2017–2018 –ம் வருடத்திற்கு தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு சீருடைகள் வழங்கவும் அதற்கான தையல்கூலி ஆண் பணியாளர்களுக்கு 1 ஜோடிக்கு ரூ.400 வீதம் இரண்டு ஜோடி முழுக்கால் சட்டைக்கும் ரூ.800/– வழங்கவும் (அரசாணை நிலை எண்.168, நாள் 16–11–2015–ன்படி, பெண் பணியாளர்களுக்கு ஜோடி 1–க்கு ரூ.40 வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.80 வீதமும் வழங்கலாம். அதற்கான செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2970**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 3</u>

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நடைபெறும் வழக்குகள் (WP(MD) No.1036/2013, 8455/2013, 8457/2013, 8460/2013, 8462/2013, 8595/2013, 8496/2013 மற்றும் 21245/2015) 29–8–2017 அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அன்று நகராட்சி சார்பில் கூடுதல் ஆவணங்கள் மற்றும் வரைபடங்கள் Xerox எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. எனவே மேற்படி வழக்குகளுக்கு கூடுதல் செலவாக ரூ.15000/– நகராட்சி வழக்கறிஞர் திரு. வாமனை கேட்டுள்ளார். எனவே மேற்படி தொகை ரூ.15000/– மட்டும் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– ரூ.15000/– மட்டும் வழக்கறிஞருக்கு வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2971**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சியில் எலக்ரோ குளோரினேட்டர் வினியோகம் செய்த வகைக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள ரூ.38,520/– ஆதவன் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2972,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 5</u>

தமிழக அரசின் ஓராண்டு சாதனைகள் மக்களை சென்றடையும் வகையில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண்.273/செ.ம.தொ.அ/2017, நாள் 11–8–2017–ல் அறிவுறுத்தப்பட்டதன்படி குழித்துறை நகராட்சியின் திட்டப்பணிகள் தொடர்பாக தமிழ் முரசு நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.9500/– Kal Publication (P) Ltd–க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2973,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சியில் 2015–2016 தணிக்கை அறிக்கை நடைபெற்றதில் அதற்குரிய தணிக்கை அறிக்கை 6 Booklet கணனியில் போட்டு புக்லெட் தயாரித்து வழங்கிய வகைக்கு திரு.E. Arunthethi கணனி நிறுவனத்தில் தொகை ரூ.8890/– வழங்கிட உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– தொகை ரூ.8890/– E. Arunthethi கணனி நிறுவனத்திற்கு வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2974,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சி ஆணையர் அறையில் உள்ள பழுதான Table, Chair மாற்றி புதிதாக Table, Chair வாங்குவதற்கும், பொறியாளர் அறையில் Aluminium Anodised partition அமைப்பதற்கும் மேற்படி இரண்டு அறைகளிலும் Curtain, Table Glass அமைப்பதற்கும், உத்தேச மதிப்பீடு ரூ.90,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2975,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திலுள்ள கிரைண்டர் பழுது ஏற்பட்டுள்ளதால் உடனடியாக பழுதுநீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) Babu Motor Coil Rewinding works, Marthandam - Rs. 3400/-
2) L.K. Electricals Services, Karungal - Rs. 3550/-
3) Rajeswari Electricals Services, Nagercoil - Rs. 3500/-

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் Babu Motor Coil Rewinding நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி பழுது நீக்கம் செய்யப்பட்டதற்கும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2976**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திலுள்ள Billing Machine பழுது ஏற்பட்டுள்ளதால் உடனடியாக பழுதுநீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) Vimal Scale Services - Rs. 7025/-
2) Jaya Balance Sales and Service - Rs. 7450/-
3) New Era Computers Sales and Service - Rs. 7550/-

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் Vimal Scale Services கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்கி பழுது நீக்கம் செய்யவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2977**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட காந்தி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்கின் மின் இணைப்பு தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் தற்காலிக துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே தேசிய நெடுஞ்சாலைத்துறையால் புதியதாக பாலம் அமைக்கப்பட்டு வரும் பணிக்கு இடையூறாக இருக்கும் உயர்கோபுர மின்விளக்கை மாற்றி மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் வைப்பதற்கும் அதற்கான செலவுத்தொகை ரூ.1,98,000/– நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2978,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள ஏரியேட்டர் அறையில் பேனல் போர்டில் உள்ள பழுதுடைந்த பொருட்களை மாற்றி புதிய பொருட்கள் பொருத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.25,000/—ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2979**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75J8227ற்கு 2017—2018—ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதால் வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்வதற்கு ரூ.84527/—க்கான மதிப்பீடு ABT Industries Ltd. மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் ABT Industries நிறுவனம் மூலம் நீக்கம் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2980**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN74W-0236 கழிவுநீர் டாங்கர் லாறியில் கம்பிரசர் மூலம் இயக்கும் போது வாகனத்தின் Tank-ன் மேல் பொருத்தப்பட்டுள்ள அளவுகோல் Pipe துண்டிப்பாகியுள்ளதால் கழிவுநீர் ஊறிஞ்ச இயலாத நிலையிலுள்ளது. மேலும் வாகனத்திற்கு புதிதாக 12W பேட்டரி பொருத்தப்பட வேண்டியுள்ளது. இவ்வாகனத்திலுள்ள அனைத்து பழுதுகளையும் நீக்கம் செய்யவும் புதிதாக 12W பேட்டரி வினியோகம் செய்யவும் Sastha Enviro Tech Equipment மூலம் ரூ.1,11360/—ற்கான மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை Sastha Enviro Tech Equipment மூலம் செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**நகர்மன்றத் தீர்மான எண்.2981,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சி பணியாளர்களின் சேமநல நிதிக் கணக்கிற்கான வட்டி 2009–2010 முடிய உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநர் வழியாக அனுமதிக்கப்பட்டு நகராட்சி பணியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

2010–2011 முதல் 2015–2016 உள்ள சேமநல நிதிக்கணக்கிற்கான வட்டிப்பிரேரணை உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குனருக்கு அனுப்பப்பட்டதால் சில திருத்தங்கள் செய்து திருப்பிவிடப்பட்டது. விரைவில் உரிய பிரேரணை அனுப்பப்பட்டுவிடும். எனவே தமிழ்நாடு உள்ளாட்சி நிதித்தணிக்கை நடைமுறை நூல் தொகுதி 11 பக்கம் 286–ல் இடம் பெற்றுள்ள 8.0.6/72, நாள் 12–1–1972–ல் ஒப்பு பெற்ற பணியாளர்களின் சேமநல நிதி சந்தா தொகை மீதான வட்டித் தொகையை கணக்கீட்டு பொது நிதியிலிருந்து முன்பணத்தலைப்பின்கீழ் சேமநல நிதிக் கணக்கில் மாற்றம் செய்து வட்டி பெறப்பட்ட உடன் முன்பணத்தொகையை சரிகட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே 2013–2014 முதல் 2015–2016 முடிய முன்னாள் மேலாளர் திரு. காந்திராஜன் அவர்களுக்கு வட்டித்தொகை ரூ.15,751/– பொது நிதியிலிருந்து சேமநல நிதிக்கு மாற்றம் செய்து வழங்க உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– பொதுநிதியிலிருந்து ரூ.15,751/– சேமநல நிதிக்கணக்கிற்கு மாற்றம் செய்யலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2982**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 15</u>

மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள புதிய B-Block கடைகள் வரிவிதிப்பு எண்.201419, 201420, 201422, 201425, 201427 ஆகிய ஐந்து கடைகளுக்கு 31–10–2017வுடன் உரிமம் முடிவடைவதால் மீண்டும் மூன்றாண்டு காலம் கடையினை தொடர்ந்து நடத்த அனுமதி கேட்டுள்ளனார். ஆகவே மேற்கண்ட வரிவிதிப்புகளுக்கு கேட்பு தொகையுடன் 15% உயர்வு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2983,**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு வெளியூர் மற்றும் உள்ளூர் சென்ற வகைக்கு அலுவலகப் பணியாளர்கள் பயணப்படி வழங்க உரிய மனு அளித்துள்ளார்கள். அதன்

அடிப்படையில் 2017–2018–ம் ஆண்டிற்கு பணப்படியாக ரூ.75,000/– அனுமதித்து உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2984**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி. தனம் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்த திரு. முருகன் ஆகியோர் கடந்த 31–05–2017 அன்று ஒய்வு பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள துப்புரவு பணியாளர் பணியிடம் ஒன்றும், துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் ஒன்றும் ஆக மொத்தம் 2 காலிப்பணியிடங்களை நிரப்பிக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– துப்புரவு பணியிடம்–1, துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம்–1 ஆகிய இரு பணியிடங்களையும் நிரப்பிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண்.2985**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.